

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளில் தனது அரசு முறைப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று (31.5.2023) காலை சென்னைக்கு புறப்பட்டபோது, டோக்கியோ விமான நிலையத்தில் ஜப்பான் நாட்டிற்கான இந்தியத் தூதர் சிபி ஜார்ஜ் அவர்கள் வழியனுப்பி வைத்தார்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) கோட்டம், திருச்சிராப்பள்ளி மண்டலம், மலைக்கோட்டை கிளையில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுனர்கள் மற்றும் நடத்துனர்களுக்கு குளிரூட்டப்பட்ட ஓய்வறையை திறந்து வைத்து, திருச்சிராப்பள்ளி, கரூர், புதுக்கோட்டை, காரைக்குடி, கும்பகோணம் மற்றும் நாகப்பட்டினம் மண்டலங்களில் அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணப்பலன்கள் வழங்கினார்கள். இந்நிகழ்வில், போக்குவரத்துத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் கே.பனீந்திர ரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் டாக்டர்.இரா.வைத்திநாதன், கும்பகோணம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், மேலாண் இயக்குநர் எஸ்.எஸ்.ராஜ்மோகன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்திரபாண்டியன், தியாகராஜன், செ.ஸ்டாலின் குமார், அப்துல்சமது, (தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் பொது மேலாளர் (திருச்சி மண்டலம்) எஸ்.சக்திவேல் ஆகியோர் உடன் உள்ளனர்.

### தேனி மாவட்டத்தில் ‘அரிகொம்பன்’ காட்டு யானையின் நடமாட்டம்!

# பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு நடவடிக்கை!

## அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் விளக்கம்!

சென்னை, ஜூன் 1-

தேனி மாவட்டத்தில் “அரிகொம்பன்” காட்டு யானையின் நடமாட்டம் குறித்து அரசு சார்பில் - சுற்றுச் சூழல், கால நிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கேரள உயர் நீதிமன்றம், ஆணையின்படி, 35 வயது ஆண் யானையான “அரிகொம்பன்” ஐ பிடித்து வேறு இடத்திற்கு மாற்ற உத்தரவு பிறப்பித்தது. அதன்படி கேரள வனத்துறையினர் நடவடிக்கை எடுத்து இந்த யானையை கடந்த ஏப்ரல் 29-ஆம் தேதி பெரியாறு புலிகள் காப்பக வனப்பகுதியில் கேரள தமிழக எல்லையில் விடு வித்தனர்.

“அரிக்கொம்பன்” காட்டு யானையின் நடமாட்டத்தைக் கண்காணிக்க தமிழ்நாடு அரசு பல துறைகளுடன் ஒருங்கிணைந்து துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. கள இயக்குநர் மற்றும் தலைமை வனப் பாதுகாவலர், ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம் அவர்களின் தலைமையில் மேகமலை கோட்டத்தின் துணை இயக்குநர், தேனி மாவட்ட வன அலுவலர் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்ட துணை இயக்குனர்; மேகமலை கோட்டத்தின் உதவி வனப் பாதுகாவலர் மற்றும் துணை வனப் பாதுகாவலர் ஆகியோர் கொண்ட ஒரு குழுவை அரசு அமைத்துள்ளது. மதுரை வனப் பாதுகாப்புப் படையின் மூலம் வனப்பகுதிக்குள் யானைகளை இடமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகத்தின் உள்ளூர் யானை கண்காணிப்பாளர்கள் உட்பட முதுமலை மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகத்தை சேர்ந்த 16 யானைத் தட கண்காணிப்புக் காவலர்கள் ரேடியோ காலர் பொருத்தப்பட்ட இந்த யானையின் நடமாட்டத்தைக் கண்காணித்து வருகின்றனர்.

டாப்சிலிப் யானைகள் முகாமில் இருந்து ‘சுயம்பு’ மற்றும் ‘முத்து’ மற்றும் முதுமலை யானைகள் முகாமில் இருந்து ‘உதயன்’ ஆகிய 3 கும்கி யானைகள் சம்பவ இடத்துக்கு வந்து மேற்படி நடவடிக்கைகளுக்குத் துணை நிற்கின்றன.

யானைகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க இரண்டு பிரிவுகளாகச் செயல்பட திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம் கள இயக்குநர், நான்கு முக்கிய குழுக்களை அமைத்துள்ளார். தளவாடங்கள், கும்கிகளைக் கையாளுதல், தரவுகளைத் திரட்டுதல் மற்றும் இதர தேவைகளுக்குத் தனிக் குழுக்கள் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன. மின்சாரம் தாக்காமல் இருக்க, யானைகள் பாதுகாப்பாகச் செல்வதை தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பிரத்யேகக் குழு கண்காணித்து வருகிறது.

ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பை உறுதி செய்வதற்காக கம்பம் வன சரக அலுவலக வளாகத்தில் மத்திய கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் இருந்து மொத்தம் 160 வனத்துறை அலுவலர்களும், ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டம், ஆனைமலை புலிகள் காப்பகம், முதுமலை புலிகள் காப்பகம், ஓசூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளில் இருந்து 31 வனத்துறையினரும் களத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கம்பம் நகராட்சிப் பகுதியில் 144 தடை உத்தரவு மூலம் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்படுகிறது. தேனி மாவட்ட ஆட்சியர் நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருகிறார். யானையின் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில் பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அவர் தனது விளக்க அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# ஈரோடு மாவட்டம் கீழ்பவானி பிரதான கால்வாய் சீரமைப்பு நடவடிக்கை!

## விவசாயப் பெருங்குடி மக்கள் ஒத்துழைக்க நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 1-

ஈரோடு மாவட்டம் கீழ்பவானி பிரதான கால்வாய் சீரமைத்தல் தொடர்பாக நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் அவர்களின் அறிக்கை வருமாறு :-

ஈரோடு மாவட்டம் கீழ்பவானி பிரதான கால்வாய் விரிவாக்குதல், புதுப்பித்தல் மற்றும் நவீனப்படுத்துதல் (ERM) திட்டத்தி ற்காக நபார்டு வங்கியின் மூலம் 709.60 கோடி ரூபாய் கடன் பெற்று பணிகள் துவங்குகின்ற நேரத்தில் விவசாயிகளில் ஒரு சாராரிடமிருந்து எதிர்ப்புகள் வந்தன.

அதாவது கால்வாயின் தரைப்பகுதியில் காங்க்ரீட் தளம் அமைத்து விட்டால் தண்ணீர் பூமியில் ஊறாது. கால்வாயின் அருகில் இருக்கின்ற விவசாயிகள் விவசாயத்திற்கும் குடிநீருக்கும் சிரமப்படுவார்கள். எனவே, தரையில் காங்க்ரீட் தளம் அமைக்கக் கூடாது என்று ஒரு சாரார் கேட்டுக் கொண்டார்கள். அரசு அந்த நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்டது.



கரைகள் மற்றும் கட்டுமானங்களைப் பொருத்தமட்டில் சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்னாள் கட்டப்பட்டவை. கால்வாய்கள் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்த காரணத்தால் காலப்போக்கில் அவைகள் சிதைந்து, உடைந்து, பலமிழந்து போய்விட்டது. அன்று கரையில் வைக்கப்பட்ட மரங்கள் பெருமளவில் வளர்ந்து வேர்கள் மூலம் கரைகள் உடைவதற்கு காரணமாகி விட்டது. மதகுகள் மற்றும் மழைநீர் செல்லும் பாலங்கள் காலப்போக்கில் சிதைந்து போய் விட்டது.

**பொய்ப் பிரச்சாரம்!**

இவைகளையெல்லாம் சீரமைத்தால் தான் விவசாயத்திற்கு தண்ணீர் கடைமடைவரை தடையின்றிக் கிடைக்கும். ஆனால், பிரதான கால்வாயின் இருபுறங்களிலும் இருப்பவர்களுக்கு இதனால் பாதகம் ஏற்பட்டுவிடும் என்று சிலர் திட்டமிட்டு பொய் பிரச்சாரத்தை பரப்பிவிட்டார்கள்.

விவசாயிகள் மத்தியில் ஏற்பட்ட இத்தகைய ஐயத்தைப் போக்குவதற்காக, நீர்வளத்துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். அமைச்சர் முத்துசாமி அவர்களும் பல முறை இந்த பிரச்சினையை பேசித் தீர்ப்பதற்கு அதிக காலம் செலவிட்டார். நானும், இரு தரப்பு விவசாயிகள் மத்தியில் பல முறை பேசி விளக்கி இருக்கிறேன்.

**சேதமடைந்த மதகுகள்**

நீண்ட இடைவெளிக்குப் பிறகு விவசாயிகள் மத்தியில் சற்றொப்ப ஒருமித்த கருத்துக்கள் உருவாகி இருப்பதை நான் வரவேற்கிறேன். இத்தகைய மனப்போக்கு தான் விவசாயத்தையே நம்பி இருக்கிற விவசாயிகளின் வாழ்வுக்கு உதவுவதாகும். எனவே, நின்று போயிருக்கிற பணிகளை மீண்டும் துவங்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

கால்வாயின் தரையில் எக்காரணம் கொண்டும் காங்க்ரீட் தளம் போடக்கூடாது என்றும், சேதமடைந்த மதகுகள் (SLUICES) மற்றும் குறுக்கு கட்டுமானங்களை (CROSS MASONRY STRUCTURES) சீரமைத்திடவும், மிகவும் பலவீனமாக உள்ள கால்வாய் கரைப் பகுதிகளில் காங்க்ரீட் சுவர் அமைக்கவும் உத்தரவிட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே பல இடங்களில் கால்வாயில் உடைப்பு ஏற்பட்டன. இப்பணிகளை இப்போது செய்யாவிட்டால் கரைகளில் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் பெருமளவில் வீணாகும் நிலை ஏற்படும் அபாயம் உள்ளது. மேலும், இந்தப் பணிகளைச் செய்வதன் காரணமாக கால்வாய் செல்லும் பகுதியில் குடிநீருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, இப்பணியை செய்து முடித்து கீழ்பவானி பிரதான கால்வாயை சீரமைத்திட விவசாய பெருங்குடி மக்கள் அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தருமபுரி மாவட்டத்தில் கிடங்கில் நெல் இருப்பு குறித்து

# ஆராயாமல் வசவுகளை அள்ளித் தெளிக்கிறார் பழனிசாமி!

## உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கண்டனம்!

சென்னை, ஜூன் 1-

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அறிக்கை வருமாறு :-

தர்மபுரி மாவட்டத்தில் வெற்றிலைக்காரன்பள்ளம் கிடங்கில் 22273 மெட்ரிக் டன் நெல் இருப்பு வைக்கப்பட்டிருந்தது. அதில் 7174 மெட்ரிக்டன் அரவைக்கு அனுப்பியது போக 15099 மெட்ரிக்டன் இருப்பு உள்ளது. இதிலிருந்து தான் 7000 டன் இருப்பில் இல்லை என்று இரு தரப்பினர் முரணாகக் கூறுவதாகக் கேள்விக்குறியுடன் செய்தி வந்ததைப் பார்த்தவுடனே தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவரையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக மேலாண்மை இயக்குநரையும் அந்தக் கிடங்கில் 100% தணிக்கை செய்து உண்மைத்தன்மையை அறிய ஏற்பாடு செய்திட ஆணையிட்டுள்ளேன்.



அதற்குள் அவசரப்பட்டு வெளிநாட்டு முதலீடுகளை உண்மையிலேயே ஈர்த்து வரும் நம் முதல்வர் அவர்கள் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும் தன்னால் செய்ய முடியாத ஒன்றைச் செய்கிறாரே என்று பொறாமையின் உச்சகட்டத்தில் பத்திரிக்கையில் வந்த செய்தியை ஆராயாமல் வசவுகளை அள்ளித் தெளிக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்காது.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.



திருச்சி மாவட்டம், மணப்பாறை ஒன்றிய தி.மு.க. வின் சார்பில் 2024 நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்வதற்கான ஆயத்த செயல்வீரர்கள் கூட்டம் புத்தாநத்தம் தனியார் திருமண மஹாலில் ஒன்றியச் செயலாளர் ராமசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மணப்பாறை ஒன்றியத்தில் மட்டும் புதிதாக தி.மு.க.வில் இணைந்த 4500 புதிய உறுப்பினர்களின் படிவங்கள் தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்கூட்டத்தில் திண்டுக்கல் மாவட்டக் கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார், சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள் கோவிந்தராஜ், சபியுல்லா, கவிஞர் சல்மா, செங்குட்டுவன், மூக்கன், லீலாவேலு, மணப்பாறை ஒன்றிய குழு தலைவர் அமிர்தவள்ளி, மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் மாவட்டக் கழக நிர்வாகிகள் ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அரசு திரைப்பட நிறுவனம் –

# மாணவர் சேர்க்கை 2023-2024 கால அவகாசம் நீட்டிப்பு!

சென்னை, ஜூன் 1-

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் இயங்கி வரும் ஒரே கல்வி நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் திரைப்படத்துறை மற்றும் தொலைக்காட்சி துறையில் மிகச் சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களையும், இயக்குநர்களையும் உருவாக்கி வரும் தனித்துவம் மிக்க நிறுவனமாகும்.

இந்நிறுவனத்தில், 2023 2024ஆம் கல்வி ஆண்டில் பின்வரும் பிரிவுகளில் பட்டப்படிப்பிற்கான முதலாம் ஆண்டு மாணவர் சேர்க்கை தொடர்பான விண்ணப்பப் படிவங்களை 31.05.2023க்குள் இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்யவும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 02.06.2023க்குள் சமர்ப்பிக்கவும் கேட்டுக் கொள்ளப்பபட்டுள்ளது.

இளங்கலை காட்சிக்கலை ( ஒளிப்பதிவு)

இளங்கலை காட்சிக் கலை (எண்மிய இடைநிலை)

இளங்கலை காட்சிக்கலை (ஒலிப்பதிவு)

இளங்கலை காட்சிக் கலை (இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்)

இளங்கலை காட்சிக் கலை (படத்தொகுப்பு)

இளங்கலை காட்சிக் கலை (உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன்)

தற்போது, மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்வதற்கான கால அவகாசம் 15.06.2023 வரையிலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் 19.06.2023 வரையிலும் நீட்டிக்கப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை www.tn.gov.in எனும் இணையதம் வாயிலாக பதிவிறக்கம் செய்திடலாம் என்றும், மாணவர் சேர்க்கை தொடர்பான கூடுதல் விபரங்களை தகவல் தொகுப்பேட்டினை பார்த்து அறிந்து கொள்ளலாம் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மாணவர்களின் நலன் கருதி நீட்டிக்கப்படும் கால அவகாசத்தினை கலை ஆர்வம் உள்ள அனைத்து மாணவ/மாணவியரும் பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தனியார் பேருந்து சாலை விபத்தினால் காயம்பட்டு சிகிச்சை பெற்றுவருபவர்களை சந்தித்து அத்தியாவசியப் பொருட்களை வழங்கி ஆறுதல் கூறினார். மேலும் புற்றுநோய் கதிரியக்க சிகிச்சை கருவியின் செயல்பாட்டை துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் சி.பழனி, மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்ப ராஜ், ஒன்றியச் செயலாளர்கள் ஜெ.ஜெயபால், வி.ஜி.பிரபாகரன், பேரூர் செயலாளர் நைனா முகமது, பேரூராட்சி மன்றத் தலைவர் அப்துல் சலாம், துணைத் தலைவர் பாலாஜி, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் மீனா வெங்கடேசன், நகர மன்ற உறுப்பினர் சர்க்கார் பாபு, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, மருத்துவ அணி அமைப்பாளர் செந்தில்குமார், ஏ.கே.எஸ். இராஜேந்திரன், ஒரத்தூர் சுதாகர், மருத்துவமனை முதல்வர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.